# கம்பம் நகராட்சி

2021–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் (19.11.2021) ஆம் நாள் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு, கம்பம் நகர்மன்ற கூட்ட அரங்கில் தனிஅலுவலர் தலைமையில் நடைபெறும் அவசரக் கூட்ட நடவடிக்கைகள்

## கூட்டப்பொருட்கள்

**1.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட சர்வே வார்டு, D, பிளாக். 25, நகரளவை எண். 9/1, 9/2, 9/3, 9/4A, 9/4B, 14/1B, 1C, 1D, 1E, 1F, 1H, மற்றும் 11 –இல் கட்டுப்பட்டுள்ள 7.90 ஏக்கர் பரப்பளவுள்ள இடத்திற்கு உத்தேச மனைப்பிரிவு கோரி வரப்பெற்ற திரு. ஆர். பாஸ்கர் என்பவரின் விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு, பார்வை 4–இல் கண்டுள்ள 28.09.2021 –ஆம் தேதிய கடிதத்தின் மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடத்திற்கு இசைவு வழங்கப்பட்டதினை தொடந்து, மனுதாரர் மேற்படி வரைபடத்தின்படி, மனைப்பிரிவில் அமைந்துள்ள சாலைகள், பொது ஒதுக்கீடுகள், உள்ளாட்சி உபயோக பகுதி மற்றும் TANGEDCO உபயோக பகுதிகளை உள்ளாட்சிக்கு, தானபத்திரபதிவு எண். 5568 மற்றும் 5569 நாள்.12.10.2021 மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்டதின்படி, உத்தேச மனைப்பிரிவு வரைபடத்திற்கு இயக்குநர், நகர் ஊரமைப்புத்துறை, சென்னை, அவர்களின் ம.வ./ந.ஊஇ/ எண்.147/2021 என எண்ணிடப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேலும், மேற்படி உத்தேச மனைப்பிரிவு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகள், சிறுபாலங்கள், பெரியபாலங்கள் ஆகியவற்றினை நகராட்சி பொறியாளர் அவர்களின் குறிப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களின் படி, அன்னாரின் சொந்த செலவில் பணிகள் தொடங்கப்பட்டு 2 மாதத்திற்குள் முடித்து தருவதாக உத்திரவாதம் வழங்கப்பட்டு தற்போது பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்கண்ட பணிகள் முடித்ததற்கான புகைப்படங்கள் நகராட்சியில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேற்படி அனுமதி வழங்கப்பட்ட வரைபடத்தின்படி, சாலையில் மின்கம்பங்கள் நடுவதற்கும், குடிநீர் குழாய் அமைப்பதற்கும் ரூ.10,50,000/–ஐ இந்நகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் ஒதுக்கீடு விபரங்கள் கீழ்கண்டவாறு,

| | |
|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு<br>சாலையின் பரப்பளவு<br>மீதமுள்ள பரப்பளவு | 7.90 ஏக்கர், 31950.00 சதுரமீட்டர்<br>8888.53 சதுர மீட்டர்<br>23061.47 சதுர மீட்டர் |
| மொத்த மனைகளின் எண்ணிக்கை | 142 எண்ணம் |
| **பொதுஒதுக்கீடு** | |
| பூங்கா –1<br>பூங்கா–2 | 1445.07 சதுர மீட்டர்<br>934.94 சதுர மீட்டர்<br>––––––––––––––––––<br>2379.71 சதுர மீட்டர் (10.32%)<br>–––––––––––––––––– |
| உத்தேச சாலைகள் மற்றும் மூலை முடக்குகள் | 8888.53 சதுர மீட்டர் (27.82 %) |
| உள்ளாட்சி உபயோக ஒதுக்கீடு | 118.07 சதுரமீட்டர் (0.51 %) |
| தமிர்நாடு மின் உற்பத்தி மற்றும் மின்பகிர்மான கழகம் (TANGEDCO) | 118.97 சதுரமீட்டர் (0.52%) |
| EWS மனை பரப்பு | 2329.40 சதுர மீட்டர் (10.10%) |
| மனைகளின் எண்ணிக்கை | 21, 23, 25, 36, 38, 42, 75 முதல் 81 வரை, 82 முதல் 90 வரை மற்றும் 97 முதல் 98 |

எனவே, மேற்படி மனைப்பிரிவு வரைபடத்துடன் கூடிய சிறப்பு நிபந்தனைகளுடன் இறுதி ஒப்புதல் வழங்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.96/2018/எப்1)

**2.** கம்பம் நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.3 எல்.எப். ரோட்டில் அமைந்துள்ள மறுஆக்கம் மற்றும் குழுந்தைகள் நல மைய வளாகத்தில் (UPHC) வெளி நோயாளிகளுக்கான கூடுதல் மருத்துவ கட்டிடம் கட்டும் பணி மேற்கொள்வதற்கு, இயக்குநர் மற்றும் நிர்வாக செயலர், தேசிய சுகாதார பணி மாநில சுகாதார சங்கம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.1869/NUHM/SHS/2015 நாள்.18.10.2021ன்படி, ரூ. 45.00 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி பணிகள் செய்திட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களுக்கு பிரேரணை சமர்ப்பித்து நிர்வாக அனுமதி பெற்று உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 2665/2021/இ1)

**3.** அரசாணை எண். (Ms) No.70 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 13.09.2021ன்படி, தமிழ்நாடு அரசு 2021 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், அனைத்து நகராட்சிகள், பேரூராட்சிகளில் ரூ. 1000 கோடி மதிப்பீட்டில் சமுதாயக் கூடங்கள், சந்தைகள், நவீன நூலகங்கள் போன்ற பல்வேறு அடிப்படை கட்டமைப்பு வசதிகள் "**கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம்**"**(KNMT)– 2021-22ன்**கீழ் செயல்படுத்தப்படும் என தெரிவித்து வழிகாட்டு நெறிமுறைகள் வரப்பெற்றது. இதனைத்தொடர்ந்து அரசாணை எண். (Ms) No.**92** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 30.10.2021 மற்றும் சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் எண்.**2054/2021/**பி2 நாள்**16.11.2021**ன்படி, இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்கண்ட பகுதிகளில் சாலைமேம்பாட்டு பணிகள் செய்திட ரூ. **380.92** இலட்சம் மதிப்பீட்டிற்கான திட்டமதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கி அரசாணை வரப்பெற்றுள்ளது. நிர்வாக அனுமதியில் அனுமதிக்கப்பட்டுள்ளபடி, இப்பணிகள் செய்திட மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

| Sl No | Name of work | Estimate Amount Rs.in lakhs |
|---|---|---|
| 1 | Providing B.T Surface and Construction of Storm Water Drinage,Culvert at Ward No 1- 122/01/R011-R.R Nagar South 2nd Cross Street,122/01/R012-R.R Nagar South 3rd Cross Street,122/01/R016-2nd Street,122/01/R019-North 3rd Street,122/01/R020-North 2nd Street,122/01/R024-Kombai West 5th Cross Street,122/01/R025 -Kulanthaigal Nalam East 1 Street, 122/01/R037- East 2nd Cross,122/01/R038 -East 3rd Cross Street, 122/01/S015-North 9th Cross Street at Cumbum Municipality. | 93.13 |
| 2 | Providing B.T. Surface and Construction of Storm Water Drain with Culvert at Ward.No:3, 122/03/R67-West 1st Cross Street, 122/03/R068-Sangili Nagar East 1st Cross street,122/03/R072-East 1st Cross Street Layout,122/03/S027-Sangili Nagar West 2nd Cross Street,122/03/R074-Sangili Nagar West 5th Cross Street ,122/03/R075-Sangili Nagar West 5th Cross Street,Ward.No:14, 122/014/R229-Krishna Puram 5th Cross street,Ward No 28-122/28/ R320-Chinna Vaikal 2nd cross Street, 122/28/R178-Chinna Vaikal Street 3rd Cross street,122/28/R322-Chinna Vaikal 6th Cross Street, 122/28/R328 -Grama Chavadi 1st Cross Street,122/28/R329-Grama Chavadi 2nd Cross Street,Ward no.29-122/029/R354-Ranger Office Road 1st Cross Street, 122/029/R356-3rd Cross Street,122/029/R345 - Mani Nagaram Club Road 1st Cross Street,Ward.No:30,122/030/R362-Angoorpalayam (MPM School Road) 5th cross street,Ward no.31-122/31/R379 -Nandha Gopalasamy Nagar 8th Cross street,122/31/R380-9th Cross Street,122/31/R397 -L.F Road(Pirambu kadai Back Street),122/31/R419-Kakkan Colony left 9th Street,122/31/R442 -L.F Road(Vaigai Bar Back Side),122/31/R450 -L.F Road (Arthi backery Street),122/31/R455 -CMC Nagar 1st South Cross,122/31/R468 -Gandhi Nagar east 1 Street,122/31/R469 -Gandhi Nagar east 2nd Street in Cumbum Muncipality. | 216.69 |
| 3 | Providing PaverBlock Surface and Construction of Storm Water Drinage,Culvert at Ward No 1-122/01/S002-Kombai Main West 1st Cross,122/01/S006-West 5th Cross Street, 122/01/S009-Kombai Main East 12th Cross Street,122/01/S012 - Kannudaiyan Colony North 1st Cross Street,122/01/S013 -1st Cross East 1st Cross Street.Ward No 9-122/009/S15-Thathappa Kulam 17th Cross 1st Lane,122/009/S16 -Thathappa Kulam 17th Cross 2nd Lane,122/009/L09 -Thathappa Kulam 17th Cross 3rd Lane. Ward No 13-122/013/S100-Cumbum Mettu Road 2nd Cross Street. Ward No28-122/28/S179 - Chinna Vaikal Street 5th Cross street. Ward No 33 -122/033/S204 -Muthuramalingam 2nd Cross Street at Cumbum Municipality. | 71.10 |
| | Total | 380.92 |

**அலுவலகக்குறிப்பு : 1.** வரப்பெற்ற நிர்வாக அனுமதிக்கான அரசாணையினை மன்றம் பதிவு செய்யலாம்.

**2.** மேலும் மேற்கண்ட திட்டப்பணிகளுக்கு சென்னை, நகராட்சி நிர்வாக தலைமைப்பொறியாளர் அவர்களிடம் தொழில்நுட்ப அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். **( ந.க.எண். 929/2021/இ1)**

**4.** இந்நகராட்சி லோயர் கேம்ப் குடிநீர் திட்டம் ரூ18.80 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பணிகள் செயல்படுத்தி பணிகள் முடித்து நகராட்சி வசம் 17.04.2020ம் தேதி முதல் ஒப்படைப்பு செய்யப்பட்டது. மேற்படி திட்டத்தை நகராட்சி மூலம் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள

| | |
|---|---|
| | போதிய பணியாளர்கள் இல்லாததால்,வருடாந்திர ஒப்பந்த அடிப்படையில் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்திட ரூ44.00 இலட்சம் மதிப்பீட்டில் உரிய மன்ற அனுமதி மற்றும் நகராட்சி நிர்வாக தலைமை பொறியாளர் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் குறிப்பிட்டுள்ள எல்.ராஜேந்திரன் என்பவருக்கு இவ்வலுவலக ந.க. எண் 1136/2020/இ2 நாள் 01.12.2020ம் தேதியிட்ட செயல் முறை ஆணையில் 01.12.2020 முதல் 30.11.202 முடிய லோயர் கேம்ப் குடிநீர் திட்டத்தை இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்திட அனுமதித்து உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமை பொறியாளர் அவர்களின் கடிதம் ந.க எண் 29156/2019/DO2/நாள் **22.10.2020**ம் தேதிய கடிதத்தில் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகள் செய்திட ஏற்கனவே உள்ள ஒப்பந்ததாரரின் செயல்பாடுகளில் குறைபாடுகள் ஏதுமில்லாதநிலையில் தொடர்ந்து நீட்டித்து கொள்ளலாம் என அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br>தற்போது குடிநீர் அத்தியாவசிய பணிகளுக்கான பணியாளர்கள் வெளிக்கொணர்வு முகமை மூலம் கொண்டு வருவதற்கான உரிய கருத்துரு சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் கேட்கப்பட்டு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால், இதற்கான உரிய வழிகாட்டுதல் மற்றும் அனுமதி வரும்வரை குடிநீர் வழங்கு பணிகளில் தொய்வு ஏற்படாதவகையிலும், ஏற்கனவே வழங்கப்பட்ட அனுமதியின் படி, தற்போதைய ஒப்பந்ததாரர் திரு. எல். இராஜேந்திரன் அவர்களே தொடர்ந்து **1** மாதகாலத்திற்கு **01.12.2021** முதல் **31.12.2021** வரை பணிகள் மேற்கொள்ளவும், இதற்கான உத்தேச செலவினம் ரூ. **4.00** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **<u>அலுவலகக் குறிப்பு</u> :- 1)** மன்றம் அனுமதிக்கலாம்,<br>2) மேற்படி செலவினத்தை குடிநீர் நிதி 2021–2022–ன் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| **5.** | இந்நகராட்சியில் புதிய பேருந்து நிலையத்தில் நுழையும் பேருந்துகளுக்கு **2020–2021**–ஆம் ஆண்டிற்கு திரு. ஊ.ஈஸ்வரன் என்பவர் ரூ.**5,36,000/–**க்கு ஏலம் எடுத்து அன்னாருக்கு உரிமம் வழங்கப்பட்டது. இந்நிலையில் **25.03.2020** முதல் கொரோனா பரவல் காரணமாக பொது ஊரங்கு அமல்படுத்தப்படுவதால் பேருந்துகள் இயக்கமும் தடை செய்யப்பட்டது. மீளவும் **10/2020** முதல் பேருந்து இயக்கம் சிறிதளவில் இயக்கப்பட்டது. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசாணை எண்.**298** நாள்.**02.09.2020** –இல் அறிவித்தபடி அன்னாரின் குத்தகை தொகையிலிருந்து **04/2020** மற்றும் **05/2020** ஆகிய இரண்டு மாதங்களுக்கு ரூ.**89333/–** வஜா செய்யப்பட்டது. இந்நிலையில், சம்மந்தப்பட்ட குத்தகைதாரர் **10/2020**–இல் இருந்தே சிறிய அளவில் பேருந்துகளை இயக்கப்பட்டதால் தனக்கு பெருத்த நஷ்டம் ஏற்பட்டுள்ளது என விண்ணப்பம் செய்ததின் பேரில் அன்னாருக்கு **06/2020** முதல் **09/2020** வரை நான்கு மாதங்களுக்கு கேட்பு தொகை ரூ.**446667/–**இல் இருந்து ரூ.**178667**–ஐ தள்ளுபடி செய்து மீத கேட்பினை வசூல் செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **<u>அலுவலகக் குறிப்பு</u> :-** கொரோனா பரவல் காரணமாக 25.03.2020 முதல் 09/2020 மாதம் வரை கொரோனா பரவல் காரணமாக பொது முடக்கம் அமலில் இருந்ததால் குத்தகைதாரர் கோரிய குத்தகை தொகையிலிருந்து 06/2020 முதல் 09/2020 வரை நான்கு மாதங்களுக்கான குத்தகை தொகையினை தள்ளுபடி செய்ய மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3294/2020/சி2) |
| **6.** | இந்நகராட்சிக்கு சொந்தமான தினசரி சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு **2020–2021**–ஆம் ஆண்டிற்கு திரு. பி.எஸ். டார்லிங் ஜெகதீசன் என்பவர் ரூ.**20,58,919/–**க்கு ஏலம் எடுத்து அன்னாருக்கு உரிமம் வழங்கப்பட்டது. இந்நிலையில் **25.03.2020** முதல் கொரோனா பரவல் காரணமாக பொது ஊரங்கு அமல்படுத்தப்படுவதால் அன்னாருக்கு கட்டணம் உரிமம் வசூலிக்க தடை செய்யப்பட்டது. மேலும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் அரசாணை எண்.**547** நாள்.**03.10.2020** –இல் அறிவுறுத்தியபடி, அன்னாருக்கு **10/2020** முதல் தினசரி சந்தையில் கட்டணம் வசூலிக்க அறிவுறுத்தப்பட்டது. மேலும் அரசாணை எண்.**298** நாள்.**02.09.2020** –இல் அறிவித்தபடி, அன்னாரின் குத்தகை தொகையிலிருந்து **04/2020** மற்றும் **05/2020** ஆகிய இரண்டு மாதங்களுக்கு ரூ.**343153/–** வஜா செய்யப்பட்டது. இந்நிலையில், சம்மந்தப்பட்ட குத்தகைதாரர் **10/2020**–இல் இருந்தே தினசரி சந்தையில் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருவதால் தனக்கு பெருத்த நஷ்டம் ஏற்பட்டுள்ளது என |

| | |
|---|---|
| | விண்ணப்பம் செய்ததின் பேரில் அன்னாருக்கு 06/2020 முதல் 09/2020 வரை நான்கு மாதங்களுக்கு கேட்பு தொகை ரூ.1715766/—இல் இருந்து ரூ.686306/—ஐ தள்ளுபடி செய்து மீத கேட்பினை வசூல் செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு :-** கொரோனா பரவல் காரணமாக 25.03.2020 முதல் 09/2020 மாதம் வரை கொரோனா பரவல் காரணமாக பொது முடக்கம் அமலில் இருந்ததால் குத்தகைதாரர் கோரிய குத்தகை தொகையிலிருந்து 06/2020 முதல் 09/2020 வரை நான்கு மாதங்களுக்கான குத்தகை தொகையினை தள்ளுபடி செய்ய மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3294/2020/சி2) |
| **7.** | நாடு முழுவதும் கொரோனா நோய் தொற்று பரவலின் காரணமாக 25.03.2020 முதல் பொது ஊரடங்கு அறிவிக்கப்பட்டதால் பஸ் போக்குவரத்து முழுவதும் நிறுத்தப்பட்டது. எனவே பேரூந்து நிலையத்தில் தட்டில் வைத்து பூ விற்கும் உரிமத்தினை எடுத்த திரு. பிரபாகரன் என்பவர் ஏலம் எடுத்து பொறுப்பு தொகை செலுத்த முன்வரவில்லை. ஏனவே 2020—21 ஆம் ஆண்டிற்கான ஏலத்தொகை ரூ 27300/—ஐ கேட்பிலிருந்து நீக்கம் செய்யவும் வரும் பிப்ரவரி மாதம் நடைபெறவுள்ள பொதுஏலத்தில் மீளவும் ஏலம் கோர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு :-** அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.3294/2020/சி2) |
| **8.** | நாடு முழுவதும் கொரோனா நோய் தொற்று பரவலின் காரணமாக 25.03.2020 முதல் பொது ஊரடங்கு அறிவிக்கப்பட்டதால் பஸ் போக்குவரத்து முழுவதும் நிறுத்தப்பட்டது. எனவே பேரூந்து நிலையத்தில் தட்டில் வைத்து பூ விற்கும் உரிமத்தினை எடுத்த திரு. பரமன் என்பவர் ஏலம் எடுத்து பொறுப்பு தொகை செலுத்த முன்வரவில்லை. ஏனவே 2020—21 ஆம் ஆண்டிற்கான ஏலத்தொகை ரூ 21591/—ஐ கேட்பிலிருந்து நீக்கம் செய்யவும் வரும் பிப்ரவரி மாதம் நடைபெறவுள்ள பொதுஏலத்தில் மீளவும் ஏலம் கோர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு :-** அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.3294/2020/சி2) |
| **9.** | இந்நகராட்சியில் பொறியியல் பிரிவில் ஒப்பந்ததாரராக பதிவு செய்து தரக்கோரி கேபாஸ் கன்ஸ்ட்ரக்சன் நிறுவன உரிமையாளர் திருமதி மோ. ரூபி நிரஞ்சனா 46எக்ஸ்எ3/வா.29 ரேஞ்சர் ஆபிஸ் ரோடு, கம்பம் என்பவரால் விண்ணப்பிக்கப்பட்டது. அதன்பேரில் விண்ணப்பம் பரிசீலனை செய்யப்பட்டதில் அன்னார் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் மனுதாரரை 2021—2022 ஆம் ஆண்டு முதல் 5 ஆம் நிலை ஒப்பந்ததாரராக ( ரூ. 6,00,000/— ற்கான பணிக்கான) பதிவு செய்திட மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. |
| | **<u>அலுவலக குறிப்பு</u> :—** மன்றம் அனுமதிக்கலாம் **( ந.க.எண். 2130/2021/இ1)** |
| **10.** | இந்நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட வார்டு எண். 9 சுப்பிரமணியசாமி கோவில் குறுக்குத்தெரு மற்றும் வார்டு எண். 33 பசும்பொன் முத்துராமலிங்கம் பிரதான சாலையில் மழைகாலங்களில் மழைநீர் தேங்கி அருகில் உள்ள குடியிருப்பு பகுதிகயில் கடும் சுகாதாரக்கேடு ஏற்படும் நிலை உள்ளதாலும், தற்போது மழைகாலம் நெருங்கி வருவதால் இதனை உடனடியாக சரிசெய்வது அவசியமாகிறது. அதன்பேரில் இப்பணிகள் செய்திட ரூ. 9.80 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட திட்டமதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **<u>அலுவலகக்குறிப்பு</u>: 1)** மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி பணிகளுக்கான செலவினத்தினை 2021—22 ஆம் ஆண்டு பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். **( ந.க.எண். 2094/2021/இ1)** |
| **11.** | இந்நகராட்சிக்கு சொந்தமான முகைதீன் ஆண்டவர்புரம் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் கணினிவழிக்கல்வி (Smart class) வசதிகள் செய்திடும் பொருட்டு, இதன் மேல்நிலைப்பள்ளியில் ஒரு வகுப்பறைக்கு மட்டும் (Smart class) கணினி வழிசாதனங்கள அமைப்பதற்கான கூடுதல் வசதிகள் செய்திட தயார் செய்யப்பட்ட திட்டமதிப்பீடு ரூ.7.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **<u>அலுவலகக்குறிப்பு</u>: 1)** மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி பணிகளுக்கான செலவினத்தினை 2021—22 ஆம் ஆண்டு பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். **( ந.க.எண். 2094/2021/இ1)** |

| | |
|---|---|
| **12.** | இந்நகராட்சிக்கு சொந்தமான முகைதீன் ஆண்டவர்புரம் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் கணினிவழிக்கல்வி (Smart class) வசதிகள் செய்திடும் பொருட்டு, இதன் மேல்நிலைப்பள்ளியில் ஒரு வகுப்பறைக்கு மட்டும் (Smart class) கணினி வழிசாதனங்கள் அமைத்திட தயார் செய்யப்பட்ட திட்டமதிப்பீடு ரூ. 9.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **<u>அலுவலகக்குறிப்பு</u>: 1)** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2)** மேற்படி பணிகளுக்கான செலவினத்தினை **2021–22** ஆம் ஆண்டு கல்விநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 2094/2021/இ1)** |
| **13.** | இந்நகராட்சி தெருவிளக்கு பராமரிப்பு மற்றும் மின்சார தொடர்பான பராமரிப்பு பணிகளுக்கு **(1/2020** முதல் **9/2021**ம் மாதம் முடிய) பயன்படுத்தி கழற்றப்பட்ட பழைய பயன்படுத்த இயலாத பழைய கழிவு மின் பொருட்கள் அலுவலக இருப்பில் உள்ளவற்றை பொதுஏல நடவடிக்கை மூலம் அப்புறப்படுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **<u>அலுவலகக்குறிப்பு</u>:** மன்றம் அனுமதிக்கலாம். |
| **14.** | இந்நகராட்சி தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கு தேவையான மின் பொருட்கள் போதிய இருப்பு மிக குறைவாக உள்ளதால் தொடர்ந்து **31.03.2022** வரை பராமரிப்பு பணிக்கு தேவையான மின்பொருட்கள் வாங்க ஆகும் உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ. **390000/–**க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு:** பொதுமக்களின் நலன்கருதி மதிப்பீட்டிற்கு மன்றம் அனுமதிக்கலாம். |
| **15.** | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட **22** வார்டுகளில் துப்புரவு பணி மேற்கொள்வதற்கு **107** பணியாளர்களை வழங்கி வரும் M/s UK security Service, Chennai என்ற நிறுவனத்திற்கு இவ்வலுவலக உத்தரவு ந.க.எண். **3767/2019/** எச்**1** நாள் **29.05.2020** –இல் பணி உத்தரவு வழங்கப்பட்டு **01.06.2020** முதல் பணியை துவங்கி பணி செய்து கடந்த **28.02.2021** உடன் ஒப்பந்தம் முடிவடைந்ததால் அடுத்த காலத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெற நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இந்நிலையில் தேர்தல் நடத்தை விதிகள் அமுலில் இருந்த காரணத்தினால் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு இறுதி செய்வதற்கு சிறிது காலமாகுமென்பதால் துப்புரவு பணிகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது M/s UK security Service, Chennai நிறுவனத்துடன் **30.11.2021** முடிய ஒப்பந்த நீட்டிப்பு வழங்கப்பட்டது. தற்போது வரை மேற்படி அனுமதிபெறப்படததாலும் கொரானா நோய் தொற்று காரணமாக ஊரடங்கு அமுலில் உள்ளதாலும் மேற்கண்ட அனுமதியை எதிர்நோக்கி பொது சுகாதார நலன் கருதி மேலும் ஒரு மாத காலத்திற்கு **31.12.2021** வரை கால நீடிப்பு செய்து வழங்காலம். ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றும் விலை விகிதத்தில் பணி உத்தரவு வழங்குவதற்கும் உத்தேச செலவினத்தொகை ரூ**15.00**இலட்சத்திற்கும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு:** நிர்வாக நலன் கருதியும் பொது சுகாதார நலன் கருதியும் துப்புரவு பணிகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது துப்புரவு பணியாளர்களை வழங்கி வரும் M/s UK security Service, Chennai நிறுவனத்துடன் செய்துள்ள ஒப்பந்தத்தை **01.12.2021** முதல் ஒரு மாத காலத்திற்கு கால நீடிப்பு செய்யலாம் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம். **(ந.க.எண்.3767/2019/எச்1)** |

| | |
|---|---|
| **16.** | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட **11** வார்டுகளில் துப்புரவு பணி மேற்கொள்வதற்கு **76** பணியாளர்களை வழங்கி வரும் M/s Relyon Facility Service Pvt Ltd என்ற நிறுவனத்திற்கு இவ்வலுவலக உத்தரவு ந.க.எண். **4468/2018/** எச்1 நாள் **27.02.2020** –இல் பணி உத்தரவு வழங்கப்பட்டு **29.02.2020** முதல் பணியை துவங்கி பணி செய்து கடந்த **28.02.2021** உடன் ஒப்பந்தம் முடிவடைந்ததால் அடுத்த காலத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெற கருத்துரு அனுப்பப்பட்டு இதுவரை அனுமதி வழங்கப்படாமல் உள்ளது. இந்நிலையில் தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருந்ததாலும், கொரானா நோய் தொற்று காரணமாக ஊரடங்கு அமலில் இருந்ததாலும், ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு இறுதி செய்வதற்கு சிறிது காலமாகுமென்பதால் துப்புரவு பணிகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது M/s Relyon Facility Service Pvt Ltd நிறுவனத்துடன் **30.11.2021** முடிய ஒப்பந்த நீட்டிப்பு வழங்கப்பட்டது. தற்போது வரை மேற்படி அனுமதிபெறப்படததாலும் கொரானா நோய் தொற்று காரணமாக ஊரடங்கு அமுலில் உள்ளதாலும் மேற்கண்ட அனுமதியை எதிர்நோக்கி பொது சுகாதார நலன் கருதி மேலும் ஒரு மாத காலத்திற்கு **31.12.2021** வரை கால நீடிப்பு செய்து வழங்காலம். ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றும் விலை விகிதத்தில் பணி உத்தரவு வழங்குவதற்கும் உத்தேச செலவினத்தொகை ரூ**10.00**இலட்சத்திற்கும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு:** நிர்வாக நலன் கருதியும் பொது சுகாதார நலன் கருதியும் துப்புரவு பணிகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது துப்புரவு பணியாளர்களை வழங்கி வரும் M/s Relyon Facility Service Pvt Ltd நிறுவனத்துடன் செய்துள்ள ஒப்பந்தத்தை **01.12.2021** முதல் ஒரு மாத காலத்திற்கு கால நீடிப்பு செய்யலாம் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.**(ந.க.எண்.4468/2018/எச்1)** |
| **17.** | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட **33** வார்டுகளில் கொசுப்புழு உற்பத்தியாவதை தடுக்கும் பணிக்கு **63** பணியாளர்களை வழங்கி வரும் M/s Relyon Facility Service Pvt Ltd என்ற நிறுவனத்திற்கு இவ்வலுவலக உத்தரவு ந.க.எண். **3963/2018/**எச்1 நாள்.**27.02.2020** –இல் பணி உத்தரவு வழங்கப்பட்டு **29.02.2020** முதல் பணியை துவங்கி பணி செய்து கடந்த **28.02.2021** உடன் ஒப்பந்தம் முடிவடைந்ததால் அடுத்த காலத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெற நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இந்நிலையில் தேர்தல் நடத்தை விதிகள் அமுலில் இருந்த காரணத்தினால் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு இறுதி செய்வதற்கு சிறிது காலமாகுமென்பதால் துப்புரவு பணிகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது M/s Relyon Facility Service Pvt Ltd நிறுவனத்துடன் **31.10.2021** முடிய ஒப்பந்த நீட்டிப்பு வழங்கப்பட்டது. தற்போது வரை மேற்படி அனுமதிபெறப்படததாலும் கொரானா நோய் தொற்று காரணமாக ஊரடங்கு அமுலில் உள்ளதாலும் மேற்கண்ட அனுமதியை எதிர்நோக்கி பொது சுகாதார நலன் கருதி மேலும் ஒரு மாத காலத்திற்கு **31.12.2021** வரை கால நீடிப்பு செய்து வழங்காலம். . ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றும் விலை விகிதத்தில் பணி உத்தரவு வழங்குவதற்கும் உத்தேச செலவினத்தொகை ரூ.**6.00** இலட்சத்திற்கும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு:** நிர்வாக நலன் கருதியும் சுகாதார நலன் கருதியும் பணிகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது பணியாளர்களை வழங்கி வரும் M/s Relyon Facility Service Pvt Ltd நிறுவனத்துடன் செய்துள்ள ஒப்பந்தத்தை **01.12.2021** முதல் ஒரு மாத காலத்திற்கு கால நீடிப்பு செய்யலாம் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம். **(ந.க.எண்.3963/2018/** எச்1**)** |

| | |
|---|---|
| **18.** | கம்பம் நகராட்சி பகுதியில் தினந்தோறும் 18TPD குப்பை கழிவுகள் சேகரிக்கப்படுகிறது. இவற்றில் 6 மெ.டன் மக்கும் கழிவுகள் ஆங்கூர்பாளையம் ரோட்டில் அமைந்துள்ள நுண் உரம் செயலாக்க மையத்திலும் நந்தகோபால்சாமி நகர் நுண் உரம் செயலாக்க மையத்திலும் MCC மற்றும் கம்பம் கூடலூர் ரோட்டில் அமைந்துள்ள நகராட்சி உரக்கிடங்கில் windrow முறையில் உரம் தயாரிக்கப்பட்டு வருகிறது. விற்பனை செய்யக்கூடிய DRY WASTE தரம் பிரிரிக்கப்பட்டு தூய்மை பணியாளர் மூலம் விற்பனை செய்யப்பட்டு அவர்களுக்கு தொகை பிரித்து வழங்கப்படுகிறது. விற்பனை செய்ய இயலாத பிளாஸ்டிக் கழிவுகள் ULTRA TECH CEMENT FACTORY-க்கு அனுப்பப்படுகிறது. இவற்றை தவிர மக்காத கழிவுகள் (தலையணைகள், மேத்தை கறைகள் உடைந்த பாட்டில்கள், கண்ணாடிகள், மரக்கிளைகள், புல் பூண்டுகள் மற்றும் இதர கறைகள் நகராட்சி வாகனம் மூலம் ஆணையாளர் உத்தரவுப்படி செய்யப்படாத இடத்தில் நகராட்சி உரக்கிடங்கில் மேற்புரத்தில் ஒரு சிறிய இடத்தில் கொட்டப்பட்டு வருகிறது. இவ்விடத்தை தவிர நகராட்சிக்கு குப்பை கறைகள் கொட்டுவதற்கு வேறு இடம் இல்லை. குறுகிய இடத்தில் தினமும் குப்பை கறைகள் கொட்டப்பட்டு வருவதால் மலை பேல் தேங்கி மேடாக உள்ளது. தற்போது வடகிழக்கு பருவமழை ஒரு வாரமாக தொடர்ந்து பெய்து வருவதாலும், தண்ணீர் தேங்கி நகராட்சி JCB மூலம் சீரமைப்பு பணி செய்ய முடியாத நிலை உள்த்தால தற்காலிகமாக மழை காலம் முடியும் வரை தனியார் மூலம் Chain BullDozar வாடகைக்கு அமர்த்தி உரக்கிடடஙகு பகுதியில் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கும், மழைகாலம் என்பதால் குப்பைகள் தேங்கி நோய் தொற்று பரவ வாய்ப்புள்ளதால் குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரி உடன் நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலலவு தொகை ரூ.5,00,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு** 1) மன்றம் அனுமதிக்கலாம்<br>2)அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோருவதை மன்றம் அனுமதிக்கலாம். |

ஒப்பம்/— திரு. மெ. சரவணகுமார்
ஆணையாளர்,
கம்பம் நகராட்சி.

நாள். 19.11.2021
இடம். கம்பம் நகராட்சி